(34)

232925

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1991 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் (திருத்தச்) சட்டம்

---

[1991, ஆகஸ்ட் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

**1991, ஓகத்து மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

**விலை : சதம் 30** **தபாற் செலவு : ரூபா**

## 1991 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அரசாங்க சேவை
## பரஸ்பர சகாயச் சங்கம் (திருத்தச்) சட்டம்

[1991, ஆகஸ்ட் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 85/90

**அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம், 1991 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*283 ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகிறது :—

*"பொதுக் குறிக்கோள் கள்.*

3. கூட்டுத்தாபனம் எந்தப் பொதுக்குறிக்கோள்களுக்காக அமைக்கப்பட்டதோ அந்தப் பொதுக் குறிக்கோள்கள், சிக்கனத்தை ஊக்குவித்தல், நோய் அல்லது இடுக்கண் ஏற்படும் வேளைகளில் உறுப்பினர்களுக்கு நிவாரணம் அளித்தல், பணமுடையின்போது அவர்களுக்கு உதவிசெய்தல், ஓய்வுபெற்றதன்மீது அவர்களுக்கு நலன்களை அளித்தல்; அத்துடன் அவர்களின் வாழ்க்கைத் துணைகளுக்கு, நெறிமுறையான பிள்ளைகளுக்கு, மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் பயனைக்கொண்டு எப்பிள்ளைகள் தொடர்பாக மகவேற்புக் கட்டளைகள் ஆக்கப்பட்டுள்ளனவோ அப்பிள்ளைகளுக்கு; அத்துடன் அத்தகைய எவரேனும் நெறிமுறையான மகவேற்கப்பட்ட பிள்ளையின் நெறிமுறையான பிள்ளைகளுக்கு, தந்தையருக்கு, தாய்மாருக்கு. சகோதரர்களுக்கு, சகோதரிகளுக்கு, மருமகன்மார்களுக்கு, மருமகள்மார்களுக்கு ஏற்பாடு செய்தல் என்பனவாகுமென்று இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஒவ்வோராண்டும் யூன் முப்பதாம் நாளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வோராண்டும் ஆகஸ்ட் முப்பத்தோராந்தேதிக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.